தொகுதி-ருரு

பகுதி-க

Vol. 55

No. 1

செந்தமிழ்

திருவள்ளுவர்

ஆண்டு 1990

விகாரி-சித்திரை

April-1959

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உள்ளுறை

1. செந்தமிழன்பரே சேரீர்
பண்டித. அ. முத்துசாமிப்புலவர் 1
2. தருநடுதிருவிழா. சா. ஆபிரகாம் எம். ஏ., எல். டி., 3
3. அந்தாதியிலக்கியம்
பண்டித. இராமசுப்பிரமணிய நாவலர் 9
4. வாழ்வியல் நுட்பங்கள்—கு மா. திருநாவுக்கரசு 14
5. உலகச் சமயங்கள்—கி. பழநியப்பன் 17
6. நெடுங்கிள்ளி—மு. உலகநாதன் 25
7. ஐம்பத்து நான்காந்தொகுதியின் உள்ளுறை 29

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A. (Bar-at-Law) M. L. C.
2. திரு. சித்தாந்த கலாநிதி. பேராசிரியர். ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனுர் M. A. M. O. L. L. T. Ph. D. தமிழ்த்துறைத் தலைவர் தியாகராசர் கல்லூரி, மதுரை.
4. திரு. பேராசிரியர். பி. சோதிமுத்து. M. A., B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு. வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.
7. திரு. கி. பழநியப்பன், தலைவர். மதுரைத் திருவள்ளுவர் கழகம்-மதுரை.
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ
கடவுள் துணை
செந்தமிழ்

தொகுதி ருரு	விகாரி—சித்திரை	பகுதி. க
Vol. 55	1959—April	No. 1.

3582

செந்தமிழன்பரே சேரீர்

(தாயின் மணிக்கொடி பாரீர்—என்ற மெட்டு)

பண்டித-அ. முத்துசாமிப்புலவர்,
தலைமைத் தமிழாசிரியர், தூயமரியன்னை உயர்நிலைப்பள்ளி, மதுரை

செந்தமிழன்பரே சேரீர்—நம்
தெய்வத் தமிழ்மொழி போற்றுவம் வாரீர்

1. எந்த வகுப்பின ரேனும்—அன்றி
எந்த மதத்தினைச் சார்ந்தவ ரேனும்
நந்தமிழ்த் தாயை வணங்கின்—அவர்
நானிலம் போற்றும் தமிழரே யன்றோ?

2. எத்தனை யோமொழி தோன்றித்—தன்னை
எற்றி யழித்துத் தொலைக்க முயன்றும்
இத்தனை காலம தாகத்—தமிழ்
இளமைகுன் றாம லிருந்ததென் னென்போம்.

3. வேற்று மொழியின் கலப்பால்—தமிழ்
மேன்மை குலைந்து நலிந்தது காணீர்!
நாற்றிசை யும்புகழ் மேவித்—தமிழ்
நன்கு செழித்து வளர்ந்திடப் பேணீர்

4. தாய்க்குக் கெடுதல் புரியும்—தீய
சண்டாளர் போன்றவர் நம்மிலும் உள்ளார்.
ஏய்த்துத் தமிழைத் தொலைக்க—அவர்
எண்ணும் முயற்சிகள் யாவும் தகர்ப்போம்,

5. பெற்று வளர்த்திடும் தாயைப்—பேணல்
பிள்ளைகள் செய்யும் பெருங்கடன் அன்றோ?
பொற்புறும் நந்தமிழ்த் தாயை—நன்கு
போற்றி வளர்த்தல் புதுமையதாமோ?

வள்ளுவன் கம்பன் இளங்கோ—திரு
வாதவூ ரன்டர் திருத்தக்க தேவர்
விள்ளும் கவிகளின் மேவும்—மணம்
வீசித் திகழ்ந்தது நம்தமி ழாகும்

ஊனும் உயிரும் கலந்து—நல்ல
உ ண்மை யுணர்வினை யூட்டும் தமிழைத்
உ ேனயும் பாலையும் சேர்த்தால்—எனத்
தே சுவை கொண்டு திகழும் தமிழை

தீஞ் மொழி யான தமிழை—நம்
8. தாய்(ப ஞுகக் கிடைத்த தமிழை
தவப்ப ாழி வீரர்போ லன்றி—உளம்
வாய்பெ முயன்று வளர்த்திடல் வேண்டும்.

வைத்து ரநடை நூலும்—மேலை
9. நல்ல உ மன்னும் பலகலை நூலும்
நாட்டினில் ழினிற் செய்தே—தமிழ்!
மெல்லத் தம் எங்கும் பரப்புதல் வேண்டும்.
மேன்மையை

ழ் பேண—நாம்
10. குற்றமிலாத் தம ற் பொருளினைச் சேர்ப்போம்;
கோடிக் கணக்கி தாலைய—நம்
உற்ற இடுக்கண் ெ மொழி காப்போம்.
உயிரினை ஈந்தும் தமிழ

(செந்தமிழன்பரே)

இப்பாட்டின் உரிமை ஆசிரியர்க்கே.

தருநடு திருவிழா

பேராசிரியர் சா. ஆபிரகாம், M. A., L. T.,
(மதுரை அமெரிக்கன் கல்லூரி, விலங்கியல்துறைத் தலைவர்)

(54-ஆம் தொகுதி 369ஆம் பக்கத்தொடர்ச்சி)

கடற்கரையோரங்களில் அமைக்கப்பட்ட கட்டிடங்களும் ஆலயங்களும் கடற்காற்றால் சேதமுறுவதையறியாதார் சிலரே யாவர். உப்பங்காற்றினால் ஏற்படும் கேட்டுக்கு மாமல்லபுரத்தி லுள்ள, தனித்தனியாக ஒரே கல்லில் சமைக்கப்பட்ட ஐந்து இரதங்களே தக்க ஆதாரமாகும். முன்னாளில் இவ்விரதங்களைச் சூழ்ந்திருந்த காடுகள் உப்பங்காற்றைத் தடுத்து அவை மிகுதி யாகச் சிதைவுறாவண்ணம் பாதுகாத்தன. நாளடைவில் எரிக்க விறகுக்காக அக்காடுகளை மக்கள் அரிந்து அகற்றினர். நிகழ்ந்த தென்ன? சிற்பக்கலைக்கே மணிசிறப்புற்று அக்கலைக்கே சிகரம் போல் விளங்கிய இரதங்கள் இப்போது வருந்தக்கூடிய நிலைக்கு இழிந்துவிட்டன. அண்மையில் அவற்றைப்பார்வையிட்ட தொல் பொருளாராய்ச்சித் துறைப்பொறியியல் வல்லுநர், கல் இரதங் கள் இருக்கும் இடத்தைச் சுற்றிலும் ஒருகல் தூரத்திற்குச் சவுக்கு மரம் நட்டு இரும்பையும் அரித்துத் துரும்பாக்கும் கடற்காற்றைத் தடுக்கவேண்டுமென நம் மாநில அரசை வேண்டிக்கொண்டார். காடுகளின் அரியசேவை என்னே!

காடுகளினாற் தட்ப வெப்ப நிலையில் ஏதாவது மாறுத லுண்டா என்ற வினாவைச் சற்று ஆராய்வோம். காடுகளுக்குள் ளும், அதன் மேலும் பரவியுள்ள சூடு குறைகின்றது. சில சம யங்களில் காடுகளின் மேலே சுமார் 5000 அடி உயரத்திற்கும் காற்றின் வெப்பம் குறைகிறது. ஒரே உயரத்திலுள்ள இரு இடங்களின் ஆண்டுச் சராசரி வெப்ப தட்பங்களை ஒப்பிட்டால் காட்டிலுள்ளே இருக்கும் தட்பவெப்பம், காட்டின் வெளியே யுள்ள தட்ப வெப்பத்தை விடக் குறைந்தேயுள்ளது. ஒரே சம

பின்னிப் பிணைந்து நிற்கின்றன. செடிகளும் பல மரங்களைத் தழுவி நிற்கின்றன. ஒரு கொடியின் வேர் எங்கே? நுனி எங்கே? என்று சொல்ல முடியாதவாறு ஒரே பின்னலாக இருப்பதை நமது மூதறிஞர்கள் கண்டனர். காரணம் என்ன? காரியம் யாது? ஆதி எது? அந்தம் எது? மூலம் எது? முடிவு எது? சொல்ல முடியாது. எல்லாம் கடவுள் உருவம். அவரே ஆதியும் அந்தமும், காரணமும் காரணனும் ஒன்றே என்ற முடிவுக்கு வந்தார்கள்.

காடுகளும் மரங்களும் காக்கப்படவேண்டுமானால் நாம் செய்யவேண்டியவை யாவை?

முதற்கண், மக்களிடையே காட்டுணர்ச்சி (Forest sense) அல்லது காடுகள், மரங்கள் மீது ஓர் அன்பு, விருப்பம், உண்டாதல் இன்றியமையாதது. இவ்விதப் பண்பு பண்டை மக்களிடம் உண்டு என்பதற்குப் போற்றுதற்குரிய அநேக சான்றுகள் நாம் காட்டலாம்.

கவியரசர் காளிதாசர் எழுதிய கவினுறு சாகுந்தலம் என்ற நாடகத்தின் ஒரு காட்சியிலே அனுசூயாவும், சகுந்தலையும் தாவரங்களுக்குத் தண்ணீர் வார்க்கின்றனர், முனிவர் ஆச்சிரமத்தில் அப்போது அனுசூயா சொல்லுகிறாள், "சகுந்தலா! உன் தந்தையாகிய காசியப்ப முனிவர் உன்னைவிட அதிகமாக நேசிக்கும் இம்மரங்களுக்கும் தண்ணீர்வார்க்கலாமே' என்று சகுந்தலை உடனே, "ஆமாம். அவரது ஆணைக்குக் கீழ்ப்படிவதனாலே மாத்திரம் நான் நீர் பாய்ச்சுவதில்லை. ஆனால் நான் எவ்வாறு ஓர் தமக்கையினிடத்தில் அன்புகொள்வேனோ அவ்வாறு அளவிலா அன்பு இம்மரங்களிடத்தும் கொண்டதனாலும் அவற்றைப் பாதுகாக்கின்றேன்" என்று பதிலிறுத்தாள். பின்னும் ஆச்சிரமத்தை விட்டு துஷ்யந்தனது அரண்மனைக்கு அகலும்போது சகுந்தலை முல்லைக் கொடியை நோக்கி, "நான் இப்போது உன்னைவிட்டுச் செல்ல வேண்டியுள்ளது. நீ மரத்தை மணந்திருப்பினும் என்னையும் உனதழகிய கரங்களாகிய கிளைகளால் அரவணைத்து விடைகொடு" என வேண்டுகிறாள். இயற்கை

யனைத்தையும் உறவாகக்கொள்ளும் பேருள்ளம் என்னே! பண்பாடு என்னே!

தமிழ் மகளொருத்தி, வரி மணலில்கொட்டையை மறைத்து அதை மற்றொருத்தி கண்டுபிடிக்கும் விளையாட்டை மற்ற சிறுமியரோடு விளையாடும்போது புன்னைக் கொட்டையை மணலிலே மறந்து விட்டுச் சென்றாள். அக்கொட்டை முளை விட்டு வளர்ந்தது. அப்பெண், சிறுசெடியைத் தன் குழவியெனப் பாவித்து நெய்யும் பாலும் ஊற்றி வளர்த்தாள். பின்பு அவள் மணமகளாகி மகளிரையும் ஈன்றாள். ஆனால் அம் மகளிரே ஆர அமர நில்லாது தம் அன்னையைப் பலவாறு அலைக்கழித்தனர். அப்போது அவள் சிறிது சினந்தோன்ற தன் முதன் மகவான புன்னை, இட்ட இடத்திலேயே வேரூன்றி அமைதியாயிருந்ததைப் பெரிதும் போற்றினாள். இவ்வாறு தன் அன்னை பன்முறையும் புன்னையைப் பன்னிப் பாராட்டியதை உன்னிப்பாய்க் கேட்ட மகளும் அப்புன்னையைத் தன் புனித தமக்கையாகவே பாவித்தாள். சிறிது காலம் சென்ற பின்னர் அவள் தன் தலைவனோடு அப்புன்னையிருந்த இடத்துக்கு வந்தாள். ஆனால் அப்புன்னை தனது மூத்த தமக்கையாதலால், அதன் நிழலில் அவனோடு நகையாடவும் நாணினளாம்! தருவோடு உறவாடுதல் நம் தமிழர் மாட்டு எவ்வளவு தூரம் சென்றுள்ள தென்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

"விளையா(டு) ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை ஆகும்" என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே

இவ்வித உணர்ச்சி உண்டாவதற்கு மக்களுக்குக் கல்வி அறிவு தேவை. தாவரங்கள் நம்மைப் போலவே உண்டு உறங்குகின்றன; அவை உடம்பில் நச்சுப் பொருளை நாம் ஏற்றும் பொழுது அவை பாடுபடுகின்றன; மின்சாரம் நச்சுப்பொருள் போன்ற

தூண்டுதலுக்குப் பதிலளிக்கின்றன; நம்மைப்போல் இசையையும் நுகர்ந்து பொங்கி மகிழ்கின்றன என்று பச்சிளஞ் சிறுர்க்கும் பெரியவர்களுக்கும் அச்சிலும், பேச்சிலும் அறிவிக்கப் படவேண்டும். பம்பாய் இயற்கைச் சங்கத்தார் பூ மரங்களையும், நிழல் மரங்களையும் அழகிய வண்ணப் படங்களாக அச்சிட்டு வழங்குவது இத்துறையில் அரிய தொண்டென நாம் ஈண்டுக் கூறுமலிருக்க முடியாது.

தாவரங்கள் மீது அன்பையுண்டாக்குவதற்கும் அவற்றின் பயனை மக்களுக்கு வலியுறுத்தும் பொருட்டும் முன்னுள் உணவு அமைச்சர் K. M. முன்ஷி அவர்கள் மரம் நடு திருவிழாவை நிறுவினர். அது ஓரளவிற்குப் பயன் அளித்திருக்கின்றது என்று சொல்லலாம். கிராமங்களிலும் சாலைகளிலும் கோடையிலே இளைப்பாறிக் குளிர் தரு நிழலைக் கொடுக்கும் சாலைமரங்கள் நடப்பட்டு வருகின்றன. ஆனுல் இத்திருவிழா, மேலை நாடுகளில் குறிப்பாக ஐக்கிய மாகாணத்தில் கொண்டாடப்படுவதைப்போல் நம் நாட்டில் இல்லையென்று உரைக்கலாம்.

அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் முதலாவதாக மரம்நடு நாள் (Arbor Day) நெப்ராஸ்காவில் 1872–ஆம் ஆண்டுஏப்ரல் திங்கள் பத்தாம் நாளன்று கொண்டாடப்பட்டது. 1885-ல் அந்நாள் அக்காலத்து அ. ஐ. மா. வின் வ்வசாயத் துறைச்செயலாளர் திரு. ஜே. ஸடர்லிங் மார்ட்டன் என்பவரால் விடுமுறை நாளாக்கப் பட்டது. மூன்றிலொருபங்கு மாகாணங்கள் மரம் நடு திருவிழா விடுமுறை நாளாகக் கருதப்பட வேண்டுமெனச் சட்டமும் இயற்றப்பட்டன. 1882-ஆம் ஆண்டு முதல் இந்நாள் அங்குப் பள்ளிவிழாவாகக் மகிழ்வுடன் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்நாளில் மன்னுலகத்து மன்னிய புகழ்நிட்டிய ஆன்றவிந்தடங்கிய சான்றேர்களின் நினைவுச்சின்னமாக மரங்கள் நட்டு மகிழ்வர்.

கற்றேர்க்கும் மற்றேர்க்கும், பண்டிதர்களுக்கும் பாமரர்களுக்கும் காடுகளின் பயனையும், காடழிக்கப்பட்ட இடத்தில் மறுபடியும் காடுகள் உண்டாக்குவதால் ஏற்படும் நன்மையையும் மனதில் அறிவுறுத்த இவ்விழாவை நாம் கொண்டாடுவோமாக,

அந்தாதியிலக்கியம்

(பண்டித. இராமசுப்பிரமணிய நாவலர், தக்கலை)

பண்பு சான்ற பாண்டிய மன்னவரால் நிறுவப்பெற்ற தமிழ்க்கழகங்கள் மூன்று என்ப. அவற்றுள், காலவரையறை அறியப்படாத முதற்கழகத்தார்க்கு இலக்கணம் ஆன்றோர் போற்றும் அகத்தியம் என்ப.

'இலக்கியங் கண்டதற் கிலக்கணமியம்பலின்'
'இலக்கியத்தினின்றெடுபடும் இலக்கணம்'

என்னும் எடுத்துக்காட்டுக்களால், இலக்கியம் தோன்றிய பின்பே இலக்கணம் தோன்றும் என்னும் உண்மை விளங்குகின்றது. எம்மொழிக்கும் இஃது ஒக்கும். தாமே ஒருவர் தமக்குத் தோன்றியவாறு இலக்கியம் செய்வாராயின், அது வழக்காற்றில் வருவது அரிதாகும். வழக்காற்றுக்கு இலக்கணமே யொழிய இலக்கணத்துக்கு வழக்காறு இல்லை.

ஆகவே, இலக்கண நூலில் கூறப்படுபவற்றிற்கு இலக்கியம் உண்டு என்பது தெளிவாகின்றது. அகத்தியத்தின் வழிநூல் ஆகிய தொல்காப்பியத்தில் சில நூல் இயல்புகளை நாம் காண்கின்றோம். அதனால் அந்நூல்கள் தொல்காப்பியத்துக்கு முன் வழக்கில் இருந்தன என்பது பெறப்படுகின்றது.

நூல்கள் தொகைநிலை எனவும் தொடர்நிலை எனவும் இரு வகையாக நிகழ்கின்றன. பலவகைச் செய்யுட்களை ஒரு நூல் ஆகத் தொகுப்பது தொகைநிலை எனப்படும். எட்டுத்தொகை நூல்கள் தொகைநூல்கள் எனப்படும். தொடர்நிலை இருவகைப்படும். ஒவ்வொரு பாட்டும் பொருளால் தொடர்ந்து வருவது பொருட்டொடர்நிலை. சிலப்பதிகாரம் சீவகசிந்தாமணி இராமாயணம் பாரதம் முதலியவை பொருட்டொடர்நிலை நூல்கள் ஆகும். ஒவ்வொரு பாட்டும் சொல்லால் தொடர்ந்து வருவது

சொற்றொடர்நிலை எனப்படும். அந்தாதி, கலம்பகம், இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை முதலியன சொற்றொடர்நிலை நூல்கள் எனப்படும். சொல்லால் தொடர்தல் ஆவது ஒரு பாட்டின் எழுத்தாயினும், அசையாயினும், சீராயினும், அடியாயினும் அதன் அடுத்த பாட்டிற்கு முதலில் வருவதாம். இவ்வாறு ஒரு பாட்டின் அந்தம் அல்லது இறுதி மறுபாட்டின் ஆதி அல்லது முதலாக வரத்தொடுப்பது அந்தாதி எனப்படும். அந்தம் + ஆதி = அந்தாதி. அந்தாதி என்பது வடசொற்றொடர்.

கலம்பகம், இரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை முதலியவை அந்தாதியாக வருவன ஆயினும், அவற்றை அந்தாதி என்று கூறும் வழக்காறு இல்லை. அவை தமக்குரிய பிற இலக்கண வகையால் பெயர்பெற்றவை அந்தம் ஆதியாக வருதல் என்னும் இலக்கணத்தையே சிறப்பாகக் கொண்ட இலக்கியம் அந்தாதி என வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாற்றால், சொற்றொடர் நிலை இலக்கியத்துக்குச் சிறந்தது அந்தாதி என்பது தானே விளங்குகின்றது. தண்டியலங்கார நூலாரும் "செய்யுள் அந்தாதி சொற்றொடர் நிலையே" என்று விளங்கக் கூறிப் போந்தனர்.

நூறு வெண்பா ஆயினும் நூறு கலித்துறை ஆயினும் அந்தாதியாக வருவது அந்தாதிக்கு இலக்கணமாம். அந்தாதியை அந்தாதித்தொகை என்றும் வழங்குவர்.

> வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளில்
> பண்பா யுரைப்ப தந்தாதித் தொகையே.

என்று பன்னிருபாட்டியல் அந்தாதிக்கு இலக்கணம் கூறுகின்றது.

> பத்தாதி நூறந்தம் பல்சந்த மாலையாம்
> ஒத்தாய வெண்பா ஒருநூறு—ஒத்தசீர்
> அந்தாதி ஆகும் கலித்துறையும் அவ்வகையே
> வந்தால் அதன்பேர் அவை.

என்று வெண்பாப் பாட்டியல் கூறுகின்றது.

நூறு வெண்பா நூறு கலித்துறை
கூறுதல் நூற்றந் தாதிக் கோளே

என்று கூறுகின்றது இலக்கண விளக்கம்.

மேல், 'வேண்டிய பொருளில்' என்று கூறியதனால், அந்தாதி இன்ன பொருள்மேல் வரும் என்னும் யாப்புறவு இல்லை, எப்பொருள் மேலும் அந்தாதி பாடப்படும் என்பது அறியப்படுகின்றது. 'வெண்பாப் பாட்டியல்' பாட்டியற் பொருள்மேல் அமைந்திருப்பது நாம் இங்கே கருதத்தக்கது. அந்நூல் அந்தாதித்துப் பாடப்பட்டமையால், அதற்கு வெண்பா அந்தாதி என்னும் பெயரும் உண்டு என்பது,

''பண்பார் கவிஞர் வியந்தேத்தப் பாட்டியலாம்
வெண்பாவந் தாதி விளம்பினான் — நண்பாரும
கோடாத சீர்த்திக் குணவீர பண்டிதனும்
பீடார் களந்தைப் பிரான்''

என்பதனால் எளிதில் அறியப்படுகின்றது.

வெண்பாவால் பாடப்படும் அந்தாதி வெண்பா வந்தாதி எனவும் கலித்துறையால் பாடப்படுவது கலித்துறையந்தாதி எனவும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆயினும், பிற பாடல்களால் அந்தாதித்துப் பாடுவதும் வழக்கில் இருந்துவருகின்றது. முப்பது பாடலால் அந்தாதி பாடுவதும் உண்டு. கம்பர் பாடிய சரசுவதியந்தாதி, திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி முதலியன முப்பது பாடலால் பாடப்பெற்றவை.

பிள்ளைத்தமிழ், கலம்பகம், அந்தாதி முதலியன இக்காலத்தில் பிரபந்தங்கள் என வழங்கப்படுகின்றன. அவற்றுக்கு இலக்கணம் கூறும் நூல் பட்டியல் என்னும் பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது. பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் என்பர். பாட்டியல்கள் பலவும் அவற்றுள் சிலவற்றுக்கு இலக்கணம் கூறவில்லை. பிற்காலத்தார் செய்த இலக்கிய வகைகளையும் சேர்க்கும்பொழுது பிரபந்தங்கள் எண்ணூற்றோங்கிய தொண்ணூற்றாறினும் மிகுந்து காணப்படுகின்றன.

அந்தாதி இலக்கியங்களுள், கலியந்தாதி, ஒலியந்தாதி என இருவகைகள் காணப்படுகின்றன. இவை அந்தாதித்தொகைக்கு வேறான இலக்கணம் உடையவை.

ஒவ்வோரடியிலும் வந்த வல்லின மெல்லின இடையின எழுத்துக்களையே அடிதோறும் அவை நின்ற இடத்தில் அமைத்துக் குறில் ஆயின் குறிலும் நெடில் ஆயின் நெடிலும் ஆக, எல்லா அடிகளிலும் குறில் நெடில்கள் முதலடியில் நின்றவிடத்து நிற்கப் பாடும்வண்ணம் அல்லது சந்தக்குழிப்பில் பதினாறு கலைகொண்ட பாடல்களாலும் முப்பத்திரண்டு கலைகொண்ட பாடல்களாலும் முப்பது பாடல்களாக வருவது கலியந்தாதி எனப்படும்.

"வல்லின மெல்லின இடையின எழுத்துப்
புல்லி மருங்கு போகா தொன்றிக்
குறிலெனிற் குறிலே நெடிலெனின் நெடிலே
பொருந்தி நாற்கலை கொண்டோ ரடியாய்த்
திருந்தும் இவ்வகை நான்கடி யாகியும்
ஓரொலி யாகியும் எண்ணான் காகிய
கலையொடு பொருந்தியுங் குறிலும் நெடிலும்
முறைமுதல் வரினும் அவ்வெழுத் தாகியும்
இப்பரி சியன்ற முப்பது கட்டளை
மிக்கது கலியந் தாதி யாகும்"

எனப் பன்னிருபாட்டியல் கலியந்தாதிக்கு இலக்கணம் கூறுகின்றது. இக்கலியந்தாதி பிற்காலத்துப் பாட்டியல்களில் காணப்படவில்லையாயினும், இலக்கியம் இன்றி இலக்கணம் இல்லை ஆகையால் ஒருகாலத்து வழக்கில் இருந்தது எனக் கொள்ளுதல் வேண்டும்.

கலியந்தாதியின் இலக்கணம் பெற்றுப் பதினாறு கலை கொண்டு வரும் பாடல் முப்பது கொண்டது ஒலியந்தாதி என்று வழங்கப்படும்.

"தத்தம் இனத்தில் ஒப்புமுறை பிறழாது
நாலடி யீரெண் கலையொடு முப்பது
கோலிய தொலியந் தாதி யாகும்"

என்பது பன்னிரு பாட்டியல் ஒலியந்தாதிக்குக்கூறும் இலக்கணம். ஒலி என்பது வண்ணகம்—சந்தம்—என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது. 'வண்ணகம் என்பது ஒலியெனப்படுமே என்பதனால் இப்பொருண்மை அறியலாகும். ஒலியந்தாதிக்கு இலக்கணம் பிறபாட்டியல்களும் கூறுகின்றன.

''ஈண்டிய முப்பதா யிரெண் கலைவண்ணம்
மூண்டதொலி யந்தாதி முப்பதாம்''

என்பது வெண்பாப் பாட்டியல்.

''ஈண்டிய வண்ணம் ஈரெண்கலைமுப்பான்
ஆண்ட தொலியந் தாதி யாகும்.''

என்பது இலக்கண விளக்கப்பாட்டியல்.

ஒவ்வொரு வகைப் பாடலிலும் பத்துப்பாடல் விழுக்காடு கொண்டு பத்துவகைப் பாடலால் பாடப்படுவது பதிற்றுப் பத்தாந்தி என வழங்கப்படும். பத்து வெண்பா ஆயினும் பத்துக் கலித்துறையாயினும் அந்தாதித்துப்பாடுவது பதிற்றந்தாதி என்று வழங்கப்படுகின்றது.

''வெண்பாப் பத்துக் கலித்துறை பத்துப்
பண்புற மொழிதல் பதிற்றந் தாதி.''

என்று இலக்கண விளக்கம் பதிற்றந்தாதிக்கு இலக்கணம் கூறுகின்றது. இஃது, இலக்கியம் கண்டதற் கிலக்கிணம் இயம்பியதாம்.

அந்தாதியை 'அந்தாதி மாலை' என்றும் வழங்குவர் என்பது வெண்பாப் பாட்டியலை 'வச்சணந்திமாலை' என வழங்குதலானும், 'இம்மாலையந்தாதி வெண்பா' என அம்மையார் கூறுதலானும் விளங்குகின்றது.

(தொடரும்.)

வாழ்வியல் நுட்பங்கள்

(வித்துவான். கு. மா. திருநாவுக்கரசு)

(54-ஆம் தொகுதி 83-ஆவது பக்கத்தொடர்ச்சி)

இனி, கடுங்கனல் வீசும் கானல் நிலத்திலே வாழும் களிற்றினங்கள் படும் அல்லலைக் காண்கின்றார் பெருங்கடுங்கோ. அவ்வை அங்கு வாழவும் இயலாது அதை விட்டுச் செல்லவும் இயலாது தத்தளிக்கும் நிலையைப் படிப்பவர் உள்ளத்தே நேரில் பார்த்த வண்ணம் பதியுமாறு தீட்டுகின்றார் சேர மரபினராம் செஞ்சொற்புலவர்.

காலமோ பழுத்த முதிர் வேனிற்காலம். செடியும் கொடியும் கடும் வெயிலால் வாடி வதங்கி, தம் வாழ்வு இன்றோ நாளையோ என்னும் நிலையில் ஏங்கி நிற்கின்றன. எங்குப் பார்ப்பினும் நீரற்ற வாவிகள். காணுமிடமெங்கும் கடுஞ்சுடரால் கல்லும் கரடும் பொரிந்து பொரிந்து கடும் பொடிமணலாய்க் காட்சியளிக்கின்றன. ஞாயிற்றின் கதிரொளி பொடிமணலில்பட்டு எதிரொளி வீசிப் பார்ப்பவர் மனதில் இனியதொரு நீரென எண்ணும் வண்ணம் இயங்கிச் செல்கின்றன. இக்காட்சி பொய்யெனத் தோன்றுதலால் புலவர்களனைவரும் இதனைப் பேய்த்தேர் என்பர். காட்டில் இயங்கும் களிற்றினங்கள் யாவும் உண்பதற்கு எதுவுமின்றி உடம்பு நனிசுருங்கி, உணவில்லையேனும் குடிப்பதற்கு நீராவது கிடைக்குமா எனும் எண்ணங்கொண்டு ஏங்கித்தவித்து இங்கும் அங்கும் அலைந்து திரியுங்கால் இப்பேய்த்தேரினைக்கண்டு உண்ணும் நீரோ எனக்கருதி ஓடுகின்றன, ஓடி ஏமாற்றமடைகின்றன.

> "வேனி லுழந்த வறிதுயங் கோய்களிறு
> வானீங்கு வைப்பின் வழங்காத்தேர் நீர்க்கவா அங்
> கானம்" (கலி-7)

> 'விடுமருப் பியானை இலங்குதேர்க் கோடும்
> நெடுஞ்சுரம்' (கலி-24)

காட்டிலுள்ள கயங்களில் ஊறுகின்ற நீர் வெம்மையின் கொடுமையால் அடங்கி விட்டன. ஆதலின் நீர் வற்றியதால் நீர் இருந்த இடம் என அறிவிக்கு முகத்தான் சேறுள்ள கயங்களைக் கண்டு யானைகள் ஓடி அச் சேற்றைச் சுவைத்துத் தம்மை விட்டு நீங்கும் நிலையிலுள்ள உயிரைத் தாங்கிக்கொள்கின்றன. என்னே காட்டில் வாழும் விலங்கினங்கட்கு ஏற்பட்ட கொடுமை!

'உரல்போ லடிய வுடம்புயங் கியானை
யூறுநீ ரடங்கலின் உண்கயங் காணாது
சேறு சுவைத்துத்தஞ் செல்லுயிர் தாங்கும்'

(கலி-13)

ஆண் யானைகளுக்கு இயல்பாகவே மதநீர் சொரியும் ஞாயிற்றின் வெம்மையால் அந்நீர் சொரியாது அடங்கி விட்டது அத்தகைய நிலையில் அவ்யானைகள் அவ்விடத்தைவிட்டு ஓடுவதற்கும் வலிமையின்றித் தமது மருப்பினை நிலத்தில் ஊன்றி 'என் செய்வது இனி நாம்?' என ஏக்கங்கொண்டு செயலற்றிருக்கின்றன. அதனைக்கண்ட கவிஞர் மற்றொரு காட்சியை நமக்கு நினைவூட்டுகின்றார். வறட்சி பொருந்திய நிலத்தில் உழுவதன் பொருட்டுப் பொருந்தியுள்ள கலப்பையைப்போன்றுள்ளது அவ் யானையின் செயல்' எனக் கூறுகின்றார். இதனைக் கூறுபவர் மன்னராயினும் மக்களொடு பழகி, மக்களுடைய வாழ்வில் கலந்து, மக்களுக்காகவே வாழ்ந்த மன்னர் மரபில் தோன்றியவர் ஆதலின் அவரால் இத்தகைய உவமையினை இனிதுற எடுத்து இயம்ப முடிந்தது.

"ஞாயிறு
கடுகபு கதிர்மூட்டிக் காய்சினந் தெறுதலின்
உறலூறு கமழ்கடாஅத் தொல்கிய எழில்வேழம்
வறனுழு நாஞ்சில்போல் மருப்பூன்றி நிலஞ்சேர"

(கலி. 8)

சில யானைகள் நீர் அற்ற சுனையைநோக்கிச் சென்று தமது கைகளை அச்சுனையில் வைத்ததும் "சுரீர்" எனச் சுட்டுவிட்டன. ஏன்? அதில் குடிப்பதற்கு நீர் இருந்தால் தானே சுடாது? நீரில்லாத அச்சுனை ஞாயிற்றின் கதிரொளியால் நுண்ணிய மணலைக் கொண்டு எதிரொளிவீசி விளங்குகின்றது. அவ்வொளியை நீர்

எனக் கருதிக் கைகளைவைத்ததும் சுடத்தானே செய்யும். பாவம், யானைகள் என் செய்யும்? இப்படிச் சுடப்பட்ட யானைகள் கணக்கிலடங்காதன. இங்கிலையில் அவைகள் நாற்றிசை நோக்கி ஓடத் தொடங்கிவிட்டன. சுனைக்கு அணி அணியாக வந்த அவ் யானைகள் அச்சத்தால் குலைகுலைந்து தமக்குத் தோன்றியவண்ணம் ஓடுகின்றன. இதனால் என்னவாயிற்று? யானைகட்கு ஏற்பட்ட கொடுமை ஒருபால் இருக்க, மற்றொருபால் வழிப் போக்கர்களுக்கு என அமைந்திருந்த வழிகளோடு வேறு சில புதிய வழிகளும் தோன்றி அவர்களை மயங்க வைத்துவிட்டன வாம்.

"கடுநவை யாராற்று அறுசுனை முற்றி
யுடங்குநீர் வேட்ட வுடம்புயங் கியானை
கடுந்தாம் பதிபாங்குக் கைதெறப் பட்டு
வெறிநிரை வேறாகச் சாரச் சாரலோடி
நெறிமயக் குற்ற நிரம்பாநீ டத்தம்" (கலி. 12)

இத்தகைய கொடுமை மிகுந்த கானகம் அக்காலத்து வேற்றரசரோடு போர்புரியக் கருதிவந்தமன்னரால் பாசறை கட்டி வாழும் இடமாக இருப்பதுமுண்டு. அவ்வமயம் அக்கானகத்தி லுள்ள வழிகளை நால்வகைப் படைகளிலும் சிறந்தனவாகிய யானைப் படைகள் காவல் கொண்டு நிற்பதும் அக்கால வழக்கம் எனத் தெரிகிறது.

"பால்மருள் மருப்பின் உரல்புரை பாவடி
யீர்நறுங் கமழ்கடாஅத் தினம்பிரி யொருத்தல்
ஆறுகடி கொள்ளும் வேறுபுலம்" (கலி. 21)

(தொடரும்)

உலகச் சமயங்கள்

(கி. பழநியப்பன்)

ஈரானியர் சமயம் (தொடர்ச்சி-தொகுதி 54—பக்கம்352)

நன்மையும் தீமையும் எத்தன்மையின என்பதை மக்களுக்குக் கூறவேண்டுமென்ற விருப்பத்துடன் சோராத்சர் தம் நாட்டிற்குத் திரும்பினார். ஆனால் ஈரானிய மக்களோ அவர் சொல்வதைக் கேட்பதற்கு ஆயத்தமாக இல்லை. தாங்கள்வணங்கும் பல்வேறு தெய்வங்களுக்கும் பற்பல உருவங்களை அமைத்து அவைகளை வழிபட்டுப் பழகிய மக்கள் உருவமற்ற ஒரு தெய்வத்தை மனதால் நினைக்கவும் முடியாதவர்களாக இருந்தனர். சோராத்சரின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்கூட அவரது அறவுரைகளில் நம்பிக்கை கொள்ளவில்லை. தம்முடைய பேச்சைக் கேட்கக் கூடியவர்களைத் தேடிச் சோராத்சர் பத்தாண்டுகள் நாடெங்கும் சுற்றி வந்தார். அந்நாட்டில் அவரைப் பின்பற்ற ஒருவரும் முன்வரவில்லை. அதைக்கண்டு சோராத்சரும் சோர்வடையவில்லை. பல ஆண்டுகளுக்குப் பின் சோராத்சரின் ஒன்றுவிட்ட சகோதரர் ஒருவர் முன்வந்து இவரது கொள்கைகளை ஏற்றுக் கொண்டார்.

இருவரும் கூடி ஒருவரும் தங்களைப் பின்பற்ற முன்வராததற்குக் காரணம் யாது என்று ஆய்ந்தனர். சோராத்சர் கூறும் உயர்ந்த தத்துவங்களைப் புரிந்து கொள்வதற்குப் போதிய அளவு கல்வி அறிவில்லாததே இதற்குக் காரணம் என்ற முடிவிற்கு வந்தனர். தம்முடைய கொள்கைகளைப் பின்பற்றக் கூடியவர்கள் கல்வி அறிவு பெற்றவர்களாகத் தான் இருக்க முடியும் என்ற எண்ணத்துடன் கற்றவர்களை நாடிச்சென்றார் சோராத்சர். அக்காலத்தில் அரசனும், அரசகுடும்பத்தினரும், அமைச்சர்களும், மிகச் செல்வம் படைத்தவர்களுமே அந்நாட்டில் கல்வி கற்றவர்களாக இருந்தனர்.

ஆகவே சோராத்சர் அந்நாட்டுஅரசன் **கவிவிசுத்தாப்பரை** நாடி பால்க் எனும் நகரை அடைந்தார். அரண்மனைக்குச் சென்றார். வாயில் காப்போர்களைப் பார்த்து "அறிவுடைய ஒரே ஆண்டவனின் தூதன் சோராத்சர், மன்னன் கவி விசுத்தப்பருக்கு நன்மை தீமைகளின் உண்மையை எடுத்துக் கூற வந்திருப்பதாக உங்கள் அரசனிடம் போய்ச் சொல்லுங்கள்" என்று கட்டளையிட்டார். காவலாளிகள் அவரை யாரோ பித்தனென்று எண்ணி நகையாடினர். உடனே சோராத்சர் தம்முடைய கையில் ஒரு நெருப்புப் பந்தை எடுத்து நீட்டி "ஆண்டவனின் தூதன் நான் என்பதை இதைக்கண்டாவது உணர்ந்துகொள்ளுங்கள். உடனே சென்று உங்கள் அரசனிடம் என் வருகையைத் தெரிவியுங்கள்" என்று சினந்து கூறினர், காவலாளிகள் நடுநடுங்கி ஓடிச்சென்று அரசனிடம் நடந்ததைச் சொன்னார்கள். அமைச்சர்கள், பூசாரிகள், மந்திரவாதிகள் முதலியோர் சூழ சபையில் வீற்றிருந்த அரசன் அதைக்கேட்டு சோராத்சரை அங்கு அழைத்து வரச் சொன்னன்.

அரசவை முன்வந்த சோராத்சர் "வீர மன்னனே! நான் ஆண்டவனின் தூதன். பயனற்ற உருவ வழிபாட்டிலிருந்து உன் மனதைத் திருப்பி உண்மையான ஒரே ஆண்டவனின் புகழை உமக்கு விளக்கவே நான் வந்துள்ளேன்." என்று முழங்கினர்.

"நீர் கூறுவது உண்மை என்பதை நாங்கள் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?" என்ருன் அரசன்.

"நீங்கள் செய்து வரும் உருவ வழிபாடு பயனற்றது என்பதையும் **அவுரா மசுதா** எனும் ஒரே ஆண்டவன் காட்டிய வழியே எல்லோருக்கும் ஒளியைக் கொடுக்கக் கூடியது என்பதையும் தெளிவுபடுத்த நான் ஆயத்தமாக இருக்கின்றேன். இவை பற்றிய உங்களுடைய கேள்விகளுக்குத் தக்க விடையளிக்கின்றேன். கேளுங்கள்" என்ருர் சோராத்சர்.

அரசன் அவையிலிருந்த அறிஞர்களையும், பூசாரிகளையும், மந்திரவாதிகளையும் சோராத்சருடன் வாதாடும்படிக் கட்டளையிட்டான்,

"சோராத்சர் ஒருநிபந்தனையின்மேல் வாதத்திற்கலந்து கொண்டார். அதாவது வாதத்தில் சோராத்சர் வெற்றி பெற்றால் அரசன் அவருடைய கொள்கைகளை ஏற்று அதைப் பின்பற்ற வேண்டுமென்பது தான்."

"வாதம் தொடங்கி மூன்று நாட்கள் இரவும் பகலும் நடைபெற்றது. அரசவையிலிருந்தவர்களின் கேள்விகளுக்கெல்லாம் சோராத்சர் தயக்கமில்லாது விடையளித்தார்."

"உங்களுடைய புது சமயம் யாது? எங்கள் சமயத்திலிருந்து அது எவ்வாறு வேறுபட்டது?"

"நான் புது சமயம் எதையும் போதிக்க வரவில்லை. உள்ள சமயத்தை உயர்த்தவே வந்துள்ளேன். ஆண்டவனின் உண்மையை நான் போதிக்கின்றேன். ஆகவே அது நன்மை பயக்கும். உங்கள் உருவ வழிபாடு உண்மையானதன்று. ஆகவே அது தீமை பயக்கும்."

"ஞாயிறு, நெருப்பு, மலைகள், விண்மீன்கள் போன்ற, நாங்கள் வணங்கும், தெய்வங்களெல்லாம் உண்மையானவைகளல்ல என்று நீங்கள் கூறுகின்றீர்களா?"

"இல்லை. அவைகள் பொய்யான தெய்வங்களென்று நான் கூறவில்லை. அவையனைத்தும் தெய்வங்களே அல்ல என்று கூறுகின்றேன். ஒரு மனிதன் ஒரு வீட்டைக் கட்டினால் அவ்வீட்டை மனிதன் என்று சொல்லலாமா? அதுபோல ஞாயிறு, திங்கள் முதலியன ஆண்டவனால் படைக்கப்பட்டவைகளேயாகும்; அவைகளையே ஆண்டவன் என்று கூறுவது தவறாகும்."

"இவைகளைப் படைத்த ஆண்டவன் யார்?"

"எல்லாவற்றையும் படைத்தவர் "அவுராமசுதா" என்னும் ஆண்டவனேயாகும். உலகிலுள்ள எல்லா நன்மைகளையும் படைத்தவர் அவரே."

"அப்படியாயின் உலகிலுள்ள தீமைகளைப் படைத்தவர் யார்?"

"அங்கிரா மான்யூ என்னும் தீய சக்தியே எல்லாத் தீமைகளையும் படைத்தது."

"அப்படியானால், கடவுள் இருவர் இருப்பதாக நீங்கள் சொல்கின்றீர்களா?"

"ஆம். ஆதியில் இரண்டு சக்திகள் இருந்தன. அவைகள் நன்மைச்சக்தி, தீமைச்சக்தி எனப்படும். இரண்டும் மாறுபட்ட நோக்கங்களையுடையவைகளானபடியால், இரண்டும் பிரிந்து தனித்தனியாக செயலாற்றின. நன்மைச்சக்தி உலகிலுள்ள நன்மைகளையெல்லாம் உருவாக்கின. தீமைச் சக்தி உலகிலுள்ள தீமைகளையெல்லாம் உருவாக்கின."

"நீர் சொல்வது போன்று இரண்டு கடவுள் இருந்தால் நாம் ஏன் ஒரு கடவுளை மட்டும் பின்பற்றவேண்டும்?"

"ஏனெனில் நாளடைவில் தீமைச் சக்தியை நன்மைச் சக்தி வென்றுவிடும். முடிவில் நன்மைச்சக்தி ஒன்றே நிலைபெற்று நிற்கும்."

"நன்மையே வெற்றிபெறும் என்று நீங்கள் என்ன ஆதாரத்தில் சொல்லுகின்றீர்கள்?"

"ஏனெனில் தீமைக்கு, பின்பு நடைபெறப் போவதைப்பற்றி முன்பே தெரிந்துகொள்ளும் ஆற்றல் கிடையாது. நன்மையே உருவான ஆண்டவன், முன்பு நடைபெற்றதையும் அறிவார். பின்பு நடைபெறப் போவதையும் உணர்வார். தீமை இவை இரண்டையும் உணராது. அந்த நிமிடத்தில் தான் பெறும் இன்பம் ஒன்றை மட்டுமே அறியும். அதனால்தான் தீமையை நன்மை வெல்லும்" என்று கூறுகின்றேன்.

"மனிதனை எந்தக் கடவுள் உண்டாக்கினார்?"

"மனிதனை உண்டாக்கியவர் அவுரா மசுதா" எனும் நன்மைக் கடவுளேயாகும்.

"அவுரா மசுதா நன்மையே செய்யும் கடவுள் என்றீரே, அப்படியாயின் அவரால் படைக்கப்பெற்ற மனிதன் ஏன் தீமைகளில் ஈடுபடுகின்றான்?"

"மனிதன் யாதொரு கட்டுப்பாடும் இல்லாதவனாகப் படைக்கப்படுகின்றான். அவன் விருப்பம்போல் நன்மையையோ தீமையையோ நாடலாம். ஆனால் ஒவ்வொரு நாளும் அவன் செய்யும் நன்மை தீமைகள் தனித்தனியாக அவனுடைய வாழ்க்கை ஏட்டிலே பதிவுபெறுகின்றன. அவன் இறந்தபின் அவனது ஆவி மேலுலகிலுள்ள வாழ்க்கை ஏட்டுப் பதிவாளர்முன் செல்லுகின்றது. அவன் செய்த தீமைகளைவிட அவன் செய்த நன்மைகள் அதிகமாயின் அவனது ஆவி விண்ணுலகிற்கு அனுப்பப்படும்; தீமைகள் அதிகமானால் நரகத்திற்கு அனுப்பப்படும்."

"இவைகளுக்கு ஏதாவது முடிவு உண்டா?"

"ஆம். முடிவு உண்டு. தீமையை நன்மை வெல்லும் நாள் வரும். அதுவே தீர்ப்பு நாளாகும். அந்நாளன்று மாண்டவர்கள் அனைவரும் உயிர்பெற்று வருவர். காய்ச்சிய இரும்பு ஆற்றில் ஒவ்வொருவராக முழுகிக் கரையேற வேண்டும். நன்மை செய்தோர்களுக்கு அது குளிர்ந்தபாலில் முழுகுவதுபோலிருக்கும்; தீமை செய்தவர்களுக்கு அது நெருப்பில் சுட்டதுபோலிருக்கும். அப்படிச் சுடப்பட்ட ஆவிகள் பூமியின் நடுப்பாகமான நெருப்புக்குழியில் தள்ளப்படும். எஞ்சியிருப்போர் அனைவரும் நல்லவர்களாகவே இருப்பர். உலகில் தீமையென்பதே இராது. அன்றுமுதல் உலகவாழ்வு இன்பமயமாக இருக்கும்."

"உங்கள் ஆண்டவனைப் பின்பற்றுவதற்கு நாங்கள் என்ன செய்யவேண்டும்?"

"நல்ல எண்ணம், நல்ல சொல், நல்ல செயல் இம்மூன்றுமே ஆண்டவனை அடையும் வழி."

"எது நன்மை, எது தீமை என்பதை எப்படித் தெரிந்து கொள்வது?"

"வாய்மையே நன்மை. பொய்மையே தீமை."

"வாய்மை ஒன்றுமட்டுமிருந்தால் போதுமா?"

"வாய்மைதான் முதன்மையானது. அதன்பின், எண்ணத்திலும் செயலிலும் தூய்மை வேண்டும்; தர்ம சிந்தனையும் பிறர்க்கு உதவும் செயல்களில் ஈடுபடுதலும்வேண்டும்; பயிற்தொழில், ஆடு மாடுகள் வளர்த்தல் முதலிய பயனுடைய தொழில்களைச் செய்யவேண்டும்; பயனுள்ள மிருகங்களிடத்தி லெல்லாம் கருணையுடன் இருக்கவேண்டும்."

சோராத்சரை இதற்கு மேலும் கேள்விகள் கேட்க அரசவையில் ஒருவருக்கும் ஆற்றல் இல்லை. உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த அரசனுக்குச் சோராத்சர் கூறியவைகள் உண்மை என்று தோன்றியது. ஒப்பந்தப்படிச் சோராத்சரைப் பின்பற்ற தான்முடிவு செய்துவிட்டதாகவும் அறிவித்தான். அரசன் எவ்வழி அவ்வழி மக்கள் என்றவாறு சோராத்சரின் குடும்பத்தினர் உட்பட திரளான மக்கள் அவரைப் பின்பற்ற முன்வந்தனர்.

உருவவழிபாட்டினருக்கு இஃது ஓர் பேரிடியாக இருந்தது. சோராத்சரின் செல்வாக்கு வளர்ந்தால் அவர்களுக்கு அந்நாட்டில் வாழ்வதற்கு இடமேஇராது என்று பூசாரிகள் அஞ்சினர்.

அரசனையும் சோராத்சரையும் எப்படியாவது பிரித்துவிட வேண்டுமென்று சூழ்ச்சி செய்தனர்.

'சோராத்சர் ஒரு பில்லிசூனியக்காரன். அவன் தன்னுடைய மாயா வித்தைகளினால் ஏமாற்றி வருகின்றான்' என்று அரசனை நம்பும்படிச் செய்தால், அரசன் அவரை வெறுப்பான் என்று எண்ணி அதற்கான சதியில் ஈடுபட்டனர்.

சோராத்சர் இல்லத்தில் இல்லாத நேரம் பார்த்துத் திருட்டுத் தனமாக உள்ளே நுழைந்து, ஒரு பில்லிசூன்யக்காரனுக்கு வேண்டிய பொருட்களை எல்லாம் ஓர் அறையில் மறைத்து வைத்தனர். அரசனிடம் சென்று "சோராத்சர் ஒரு சூனியக்காரன், உங்களை

ஏமாற்றி வருகின்றான்' என்று பூசாரிகள் முறையிட்டதுமன்றி யில் அவன் இல்லத்தைச் சோதனையிட்டுப் பார்த்தால் அவர்கள் கூறுவது உண்மையென்பது தெரியுமென்றும் கூறினர், அரசன் உடனே ஆட்களை அனுப்பிச் சோராத்சர் இல்லத்தைச் சோதனை யிடச் செய்தான். பில்லிசூனியத்திற்கு வேண்டிய பூனைத்தலைகள், நாய்த்தலைகள், தலைமுடிகள் போன்ற பல சாமான்கள் அங்கு இருப்பதாக வேலையாட்கள் வந்து அரசனிடம் கூறினர். அரச னும் சினம் கொண்டு சோராத்சரை உடனே சிறையிலிடச் செய்தான்.

ஒரு நாள் அரசனுடைய குதிரை நோய்வாய்ப்பட்டது. எழுந்து நிற்கவும் முடியாத நிலையில் கிடந்தது. அரசன் கவலை யுற்றான். அரண்மனை மருத்துவர்களைப் பார்க்கச் செய்தான். பயனில்லை. மந்திரவாதிகளை அழைத்து மந்திரங்களைச் சொல்லச் சொன்னான், பயனில்லை. பூசாரிகளைக்கூட்பிட்டுப் பூசைகள் நடத் தச் சொன்னான், பயனில்லை, என்னசெய்வதென்று தெரியாது மிகவும் கவலையுடனிருந்தான்,

சிறையிலிருந்த சோராத்சர் இச்செய்திகளைக் கேட்டுத் தாம் குதிரையைக் குணப்படுத்துவதாகச் சொல்லி அனுப்பினர். அர சனும் உடனே அழைத்து வரச் சொன்னான்.

குதிரையை எழுப்புவதற்குமுன் சோராத்சர், அரசனைப் பார்த்து "நான் குதிரையின் நோயைத் தீர்த்தால் நீங்கள் என்னு டைய கொள்கைகளை ஏற்றுக்கொள்வதுடன் அதை எப்பொழு தும் வெறுக்கமாட்டேன் என்று உறுதி கூறவேண்டும்." என்றார்.

அரசன் அதற்கு இசைந்தான். சோராத்சர் குதிரையின் ஒரு காலைத் தடவினர். உடனே மரம் போலிருந்த அக்கால் உயிர் பெற்று அசையத் தொடங்கியது. இவ்வாறு மற்றைய மூன்று கால்களையும் குணப்படுத்துவதற்குமுன் அரசனிடமிருந்து மூன்று உறுதிமொழிகளைப் பெற்றார் சோராத்சர். அவையாவன: இளவரச னும் அவரது கொள்கைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும், இரா ணியும் அக்கொள்கைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும், தம்மைச் சூனியக்காரனென்று பொய்யாகக் கூறியவர்களைத் தண்டிக்க

வேண்டுமென்பவைகளே. அனைவரும் வியப்புறும் வகையில் குதிரை உயிர் பெற்று எழுந்தது.

மகிழ்ச்சியுடன் அரசன் சோராத்சரின் கொள்கைகளை நாடெங்கும் பரப்ப எண்ணினன். 12,000 மாட்டுத் தோல்களைச் சேகரித்து அக்கொள்கைகளைப் பொன் எழுத்துக்களால் அத்தோல்களில் எழுதி நாட்டின் பலபாகங்களுக்கும் அனுப்பிவைத்தான்.

சோராத்சரின் அறவுரைகளே பின்பு சோராத்ச சமய வேத நூலாக விளங்கியது. அவ்வேத நூலுக்கு அவட்தா (The Avesta) என்று பெயரிடப்பெற்றது. சோராத்சர் அந்நாட்டுத் தலைமைப் பூசாரியாக விளங்கினர்.

(வளரும்)

நன்றியுரை

' எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்''

என்னும் திருவள்ளுவரின் திருமொழியைத் தலைமேற்கொண்டு வெளியிடப்பட்டு வரும் நம் 'செந்தமிழ்' இம்முறையோடு ஐம்பத்து நான்காம் பருவம் முடிந்து, ஐம்பத்தைந்தாம் பருவம் அடைந்துள்ளது. அடியேன் இப்பொறுப்பினை ஏற்ற இவ்வோராண்டு காலத்தில் அறிஞர் பலரும் அன்புடன் செந்தமிழின் இயற்கை நலத்தைச் சிறப்பித்த பெருநன்றி என்றும் மறக்கத்தக்கதன்று. இவ்விதம் சிறப்புறுவதற்குக் காரணராக விளங்கிய அறிஞர் அனைவருக்கும், ஆதரவாளர் பலருக்கும் உள்ளன்போடு நன்றி கூறுவதோடு, இனி வருங் காலத்தும் தங்களுடைய ஆதரவையும் தந்து. தங்களாலியன்ற அளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து உதவுமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகின்றேன்

பொறுப்பாசிரியர்.

நெடுங்கிள்ளி

[மு. உலகநாதன்]

(நலங்கிள்ளியும் அவன் தேவியும் அரண்மனை நிலாமுற்றத்தின்கண் இருந்து தங்களுக்கேற்பட்ட பகைமைபற்றி எண்ணிப் பேசி நிற்றல்.)

நலங்கிள்ளி: தேவீ என்னநீ சின்னதோர் பிள்ளைபோல்
காவியுண் கண்களில் கண்ணீர் தன்னைக்
கோடை மழையெனக் கொட்டுதல் அழகோ?
வாடையில் இரவில் வந்துளாய் ஈதென்?
தூக்கம் கெடுமெனில் துயருறும் உன்னுடல்!
ஏக்கமேன்? அரசியே! எதற்குநீ வருந்துவை?
நன்னுதல் பசந்தாய், நலந்தோள் இளைத்தாய்
உன்னிடம் தானே உள்ளேன் ஈங்குநான்
பின்னெதற் கிங்குநீ பெருமழைக் கண்ணுய்!
துன்பம் கொள்வாய்?

தேவி: துயருரு திருப்பனோ?
அன்பரே! நீவிர் அருகுதா னிருப்பினும்
சின்னதோர் நலனும் சிறிதும் பெற்றிலேன்!
பெண்டிர் என்ருல் பேதைய ரெனவூர்
கொண்டதோர் கொள்கையைக் கொண்டுளீர் போலும்!

நலங்: தெவிட்டிடாத் தேனே! தீஞ்சுவைக் கனியே!
செவியது கைத்திடச் செப்புமிக் கூற்று
நன்றல! உண்மை! நானுனைப் பிரிவனோ?
என்னைநீ நம்புக.

தேவி: என்னரும் தலைவ!
நம்புவன்! நம்புவன்! நாளும் நம்புவன்!
நம்பிய நெஞ்சம் நாளும் நலிந்திட
இம்மனை ஓருயிர் இருப்ப தறிந்திலீர்!
எம்மில் தலைவன் எமக்கே உரிமையோ?
இல்லை அன்னவர்... ... ...

நலங்: ஏனுனக் கையம்!
நல்லாய்! நம்புக! நானுன துடைமையே!
அரசியல் காரணம் அன்பே! உன்னைநான்
அரவணைத் தின்பம் அளித்திட நேரம்
ஒருசிறி துமில்லை! உனக்கதால் ஐயம்
வருவ தியற்கை! வஞ்சியுன் தலைவன்
பரத்தையர் பல்நீர் பருகும் புல்லனாய்
இருந்த தில்லை! இதுவரை உண்மை!

தேவி: உண்மை அஃதெனில் உடல்தொடக் கூட
எண்ணம் இன்றி இருப்பதோ அரசியல்?

நலங்: தேவீ! நீயிது செப்பும் மொழியோ?
ஆவி யனையது அரசியல் அன்றோ?
நாட்டின் கண்ணே நம்மின் அமைச்சை
வேட்டை யாட விரும்புவன் 'நெடுங்கிள்ளி'
உட்பகை ஒன்றே ஒழிக்கும் அமைச்சை.
ஒட்டியஉன் அன்பை வெட்டுதல் கூடுமோ?
கண்ணல தூங்கு! காரிருள் தன்னில்
எண்ணம் பலவாய் எண்ணுதல் கூடா!

தேவி: சரி சரி! நிலவும் தென்றலும் நாளை
எரித்தெனைச் சாம்பலாய் இங்குமதிடத்தில்
தந்திடும் மகிழ்ச்சி! சாவென பெரிதோ?

நலங்; பைந்தமிழ் மொழியே! பனிநீர் புல்லைத்
தழுவா திருக்குமோ? தமிழே! வா! வா!
எழுந்திரு. செல்வோம்!

தேவி: இல்லை! இல்லை!
நாளை நிலவில் நம்முயிர் கூடுக!
வேளையோ இன்று விடிந்தது அறிவீர்!
வாழ்கநும் புகழும் வஞ்சியென் வாழ்வும்
வீழ்கநும் பகைமை! வெற்றியே கிட்டுக!

(ஆவூர்க்கோட்டையை அடைந்துநின்ற 'நெடுங்கிள்ளி' யின் பால் பரிசில்வேண்டி 'இளந்தத்தன்' என்னும் புலவர் அவனை அடைந்து சிறைப்பட்டு நிற்றல்)

வாயிலோன்: மன்னர் மன்ன! மதிலினைக் கடந்தே
இன்றுநம் வாயில் 'இளந்தத்தன்' என்னும்
நூலறி புலவர் நும்மைக் காணக்
காலங் கடந்தவிவ் வேளையில் வந்துளார்!

நெடுங்கிள்ளி: புலவரா! போ! போ! போயவர் தம்மை
நலமுடன் அழைத்துவா! நம்மவர் அன்னவர்.
படித்தவர் தமக்கிங் கடையா வாயிலை
அடைத்தனை! பழிச்சொல் அடைந்தேன். ஐயோ!
செல்! செல்! நில்லாய்! சீக்கிரம்! சீக்கிரம்!

வாயி; செல்வேன் மன்ன! செல்வேன் வருவார்!

இளந்தத்தன்: ஆவூர் மன்ன! ஆண்டுபல் வாழ்க!
நாவெலா மினிக்க நானுன் புகழை
கோவூர்க் கிழாரவர் கூறிடக் கேட்டே
ஏவுவார் இன்றி இவ்விடம் வந்தேன்.

நெடுங்; மகிழ்ச்சி புலவீர்! மகிழ்ச்சி! மகிழ்ச்சி!
என்மனம் இன்றுதான் அதன்பய னடைந்தது.
எழுவீர்! அறிஞ! எழுந்துகடன் முடித்துக்
கொள்ளுவோம் உணவு குழுவுடன் கூடி!
பின்புநாம் பேசுவோம் பேசுதல் பலவும்.

நன்று. சோழா! நானுன் விருப்பை
என்சொலித் தட்டுவேன்? என்றுமுன் நாடு

சோறுடைத் தென்னும் சொல்லொடு வாழ்க!
ஆறதாம் காவிரி அன்னை காப்பாள்.

(நெடுங்கிள்ளி புலவர் இளந்தத்தனுக்கு விருந்தளித்தபிறகு)

நெடுங்: பெரும! இங்குயாம் படைத்த உணவது
சிறியனின் விருந்து! சுவைத்ததோ?

இளந்: ஆகா!
நன்று மன்னு! 'நலங்கிள்ளி' இரவலர்க்கு
அன்புடன் அளிக்கும் அட்டில் போலுள.

நெடுங்: என்ன ...?

இளந்: ஆமாம்! வேந்தே! இங்குநான்
புகழ்ச்சியாய் அவனைப் போற்றுதல் செய்யேன்.

நெடுங்: பின்பு ....?

இளந் பேணிடும் அவனின் பெருங்குணம்
மகவினைத் தூக்கி மடியினில் இருத்தித்
தகைமையாய் ஊட்டும் தாயின் அன்புபோல்
நல்லன் அன்னவன் நாடும் ஊரும்
இல்லை என்றே இரப்பார் தமக்குச்
சொன்னான் இல்லை! சேர்ந்தார் தமக்கு
வேண்டிய மட்டும் விரும்பி நல்கும்
பாண்டிய சேரர் பணிந்திடும் வீரன்
அடுதிற லாளன்! அருந்தமிழ் கற்றோன்
மடையெனச் சேனை தன்னகம் கொண்டோன்
மேலும் ... ...

நெடுங்: போதும்! புலவீர்! மேலும்
சாலவும் நன்று! சாலவும் நன்றென
ஓதுவீர் அவன்புகழ்! உரைத்தது போதும்.

(தொடரும்)

உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும் திங்களிதழ்.

ஐம்பத்துநான்காம் தொகுதி
Volume 54.

விளம்பியாண்டு
1958—1959

மதுரைத் தமிழ்ச்சங்கம்
மதுரை.

உள்ளுறை

விளம்பி 1958–59 ※ தொகுதி ருச ※ பகுதி க-கஉ

		பக்கம்
1	அகமும் புறமும்	
	திருமதி தே. தியாகராசன் எம். ஏ. ...	139
2	அகவன் மகள்	
	திரு. மா. ரா. இளங்கோவன் எம். ஏ., ...	73
3	அல்லது செய்தல் ஓம்புமின்	
	வித்துவான் கு. கருப்பசாமி ...	372
4	அணியுள் ஒன்று	
	வித்துவான் கு. மா. நாராயணசாமி ...	47
5	அறிவியலுக்கு அப்பால்	
	அ. மு. பரமசிவானந்தம் எம். ஏ. எம். லிட் ...	332
6	ஆதியுலா	
	ஆர். வீரபத்திரன் எம். ஏ., எல். டி., ...	1
7	ஆட்சி மொழி	
	பொறுப்பாசிரியர் ...	136
8	இலக்கியத்திறனாய்வு	
	நா. பாலுசாமி எம். ஏ.,	145, 169, 203, 231, 257, 307
9	உலகச்சமயங்கள்	
	கி. பழனியப்பன்	161, 217, 252, 281, 317, 347
10	உழு தொழில்	
	வித்துவான் கு. அருணாசலம் ...	143
11	உளம் வேட்டல்	
	மு. வைத்தியலிங்கம் ...	371
12	எந்நாளோ	
	நாவரசன் ..	20
13	என்ப - என்மனார்	
	வித்துவான் ஆ. சிவலிங்கனார் ...	188
14	என்மனார்	
	மா. இளையபெருமாள் எம். ஏ., எம். லிட். ..	232, 235
15	ஏன் இந்தத் தயக்கம்?	
	கு. மா. திருநாவுக்கரசு ...	40
16	கவிதையின் பண்பும் பயனும்	
	மா. இளையபெருமாள், எம். ஏ. எம் லிட். ...	177
17	கவிதையைப் பொழிந்திடுவாய்	
	கு. மா. திருநாவுக்கரசு	78

18 கற்பிற் சிறந்த குரங்கு — பக்கம்
பண்டித. ச. சாம்பசிவம் (மதுரைச்சிவம்) ... 149
19 கவிமணி
அ. திருமலைமுத்துசாமி எம். ஏ., பி. டி. ... 353
20 காதல் வாழ்வு
வித்துவான் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை 166, 193
21 கானல்
மு. வைத்திலிங்கம் ... 370
22 குறள் மலர் ஓங்குகவே
கு மா. திருநாவுக்கரசு ... 24
23 குறைவு மனம்
மு. உலகநாதன் (சிவந்தன்) ... 382
24 கோணத்திசை — ஓர் ஐயம்
வித்துவான் ஆ. சிவலிங்கனார் ... 45
25 கோயில் நான்மணி மாலை
வித்துவான் வை. சுந்தரேசவாண்டையார் ... 51
26 சங்கச் செய்திகள்—25, 63, 94, 127, 155, 224, 287, 322
27 சிலப்பதிகார உரை நடை
அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ., எம். லிட்., 209, 2·5
28 சிலப்பதிகாரத் தனி வெண்பாக்கள்
வித்துவான் ஆ சிவலிங்கனார் ... 269
29 செந்தமிழ் வளர்க்க வாரீர்
வித்துவான் அன்பு கருணையானந்தா ... 138
30 சோழர் காலத்து ஆடலும் பாடலும்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் ... 14
31 தமிழ்ச்செல்வி
வித்துவான். ஔவை: சு. துரைசாமிப்பிள்ளை 6·, 97
32 தமிழே திராவிட மொழிகளின் தாய்மொழி
அ. கி. பரந்தாமனார் எம். ஏ., 130, 180
33 தமிழ்த்தாய் திருப்பள்ளி யெழுச்சி
பண்டித அ. முத்துசாமிப் புலவர் ... 129
34 தமிழர் மானம்
மு. உலகநாதன் 152
35 தமிழிலக்கியக்கண்ணோடி
அ. திருமலைமுத்துசாமி எம். ஏ., பி. டி., ... 266

		பக்கம்
36	தரு நடு திருவிழா சா. ஆபிரகாம் எம். ஏ., எல். டி., ...	360
37	தனிமொழியா தொடர்மொழியா? மா. இளையபெருமாள் எம். ஏ. எம். லிட். ...	377
38	திராவிடமொழி யாராச்சியும் முறையும் டாக்டர். கமில் சுவேலபில் ...	57
39	திருவனந்தைக் கோவிற் சிற்பங்கள் ஆர். வீரபத்திரன் எம். ஏ., எல். டி. ...	113
40	தெவ்வற்காற்றுமோ? வித்துவான். மு. இராமகிருட்டிணன் பி. ஏ. பி. டி.	124
41	தை பிறந்தால் அ. மு. பரமசிவானந்தம் எம். ஏ. எம். லிட். ...	291
42	நல்லுயிர் நீத்ததம்மா வித்துவான் மு. இராமகிருட்டிணன் பி. ஏ. பி. டி.	330
43	நற்றிணை அரசப் புலவர்கள் வித்துவான். நா. இராமையாபிள்ளை பி. ஓ. எல்.	301, 323
44	பண்டிதமணி பண்டித. ச. சாம்பசிவம் ...	196
45	பாட்டும் பெயரும்	21
46	பாணன் (அகப்பொருள் உறுப்பினர் ... மா. ரா. இளங்கோவன் எம். ஏ.	101
47	பொருள்கோள் வித்துவான். F. X. C. நடராசா ...	137
48	மதிப்புரை வித்துவான். நா. இராமையாபிள்ளை பி ஓ. எல்.	133
49	மலையாள மொழி தமிழின் கிளை மொழியே அ. கி. பரந்தாமனுர் எம். ஏ. ...	275, 297
50	யாழ்ப்பாணத்துத்தமிழ் வித்துவான். F. X. C. நடராசா	84
51	வடமொழியும் தென்மொழியும் அ. கி. பரந்தாமனுர் எம். ஏ.	341, 357
52	வள்ளுவத்தில் உவமை நயம் அதிரை அ. அ. பகீர்	247, 272
53	வள்ளுவர் வகுத்த மனையறம் கருமுத்து. ராதா தியாகராசன் பி. ஏ. பி எஸ். சி.	108
54	வாழ்வியல் நுட்பங்கள் வித்துவான். கு. மா. திருநாவுக்கரசு	41, 79
55	வேலன் வெறியாட்டம் கி. பழநியப்பன்	33

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் நூல்கள் விற்கப்பெறும்

I. சங்க வெளியீடு

			ரு.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கணுநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினு விடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக்கட்டளை	—	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகி யிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற் பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு பி. டி. இராசன் (B. A., Bar-at-law, M. L. C.) அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.